சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:– 31.03.2022

**சாதாரணக்கூட்டம்**

திருவள்ளுவர் ஆண்டு, பிலவ வருடம் பங்குனி மாதம் 17–ஆம் நாள் (மார்ச் திங்கள் 31–ஆம் நாள்:–31.03.2022) வியாழக் கிழமையன்று மாலை 03.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி முதல் நகர்மன்றக்கூட்டம் நகர்மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற இருப்பதால் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளும்படி அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நகர்மன்றத் தலைவர்,
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.1**

இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான பதிவேடுகள், பாரங்கள், ரசீது புத்தகங்கள் மற்றும் எழுது பொருட்கள் (ஸ்டேஸனரி) அனைத்தும் வாங்கவும், 2022–2023–ம் ஆண்டிற்கான உத்தேச செலவினை தொகை ரூபாய்.5,00,000/– (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.4081/2017/பி2)**
**நகர்மன்ற தீர்மான எண்:** 01 , நாள் 31.03.2022
**தீர்மானம்** : அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.2**

இந்நகராட்சியில் மின்பணியாளர் நிலை I-ஐ ஆக 28.12.1990–ல் நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வரும் திரு.A.உசேன்முகமது என்பவருக்கு பணிநியமனத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் பின்னேற்பு பெறப்பட வேண்டும் என தணிக்கையில் தொடர்ந்து தடை எழுப்பப்பட்டது. இந்நிலையில் பின்னேற்பு வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டு பின்னேற்பு பெறப்படாததால் திரு.A.உசேன்முகமது, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்துள்ளார். வழக்கு எண்.WP(MD) No.23248/2019.

மேற்படி வழக்கிற்கு நகராட்சி சார்பாக அரசு வழக்கறிஞர் திரு.ஜெயப்பிரகாஷ் நாராயணன் என்பவர் ஆஜராகி வழக்கை நடத்தி வரும் நிலையில் கடந்த மே 2021–ல் புதிய அரசு பொறுப்பேற்று புதிய அரசு வழக்கறிஞர்களை நியமனம் செய்துள்ளது. அதற்படி அரசு சிறப்பு வழக்கறிஞர் திரு.A.K.மாணிக்கம் என்பவர் மேற்படி வழக்கினை ஏற்று நடத்துவதாக கூறியுள்ளார். மேற்படி வழக்கிற்கு ஆகும் நீதிமன்ற மற்றும் வழக்கறிஞர் கட்டணத்திற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/–க்கு மன்ற அனுமதி பெறும்பொருட்டு மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம்.**
**நகர்மன்ற தீர்மான எண்:** 02, நாள் 31.03.2022
**தீர்மானம்** : அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.3**

இந்நகராட்சியில் தூய்மைப்பணியாளராகப் பணிபுரிந்து வரும் திரு.த.தவசிமுத்துராஜா என்பவர் தான் களப்பணி உதவியாளருக்கான பயிற்சி முடித்துள்ளதால் தனக்கு களப்பணி உதவியாளர் பதவி உயர்வு வழங்கும்படி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்குத் தொடர்ந்துள்ளார். வழக்கு எண்.WP(MD)No.5815/2021. மேற்படி வழக்கிற்கு நகராட்சி சார்பாக திரு.K.மகேந்திரன், அரசு வழக்கறிஞர் ஆஜராகி வந்துள்ளார். கடந்த மே மாதம் தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு புதிய அரசு பொறுப்பேற்றுள்ள நிலையில் அரசு வழக்கறிஞர்கள் மாற்றப்பட்டு, மேற்படி வழக்கிற்கு, திரு.A.K.மாணிக்கம் சிறப்பு அரசு வழக்கறிஞர் தொடர்ந்து வழக்கினை ஏற்று நடத்துவதாக தெரிவித்துள்ளார். அன்னார் வழக்கின் ஆரம்பநிலை கட்டணம்

ரு.10,000/– வழங்கும்படி கடிதம் வழங்கியுள்ளார். இந்த வழக்கு தொடர்பான தொடர் செலவினத்திற்கான உத்தேச செலவினம் ரு.50,000/–ற்கு மன்ற அனுமதி பெறும்பொருட்டு மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்:** 03 , நாள் 31.03.2022

**தீர்மானம்** : அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.4**

இந்நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனமான நேருஜி பேருந்து நிலையத்தில் பேருந்துகள் நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு, ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு (2022–2025) 15.01.2022 அன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பொது ஏலத்திற்கு முன் வைப்புப் தொகை செலுத்தி ஏலம் கோர ஒருவரும் முன் வரவில்லை.

கீழ் காணும் இனத்திற்கு விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் முன் வைப்புத் தொகை செலுத்தி வரப்பெற்றுள்ளன.

| வரிசை எண். | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி ஆண்டுக்கேள்வி ரூபாய் |
|---|---|---|
| 1 | எம்.பால்பாண்டி,<br>த/பெ.மாயாண்டித்தேவர்,<br>பண்ணைப்பட்டி போஸ்ட்,<br>உசிலம்பட்டி தாலுகா,<br>மதுரை மாவட்டம் | **5,96,000/–** |
| 2 | K.தனசீலன்,<br>த/பெ.M.கருத்தப்பாண்டி,<br>பண்ணைப்பட்டி போஸ்ட்,<br>உசிலம்பட்டி தாலுகா,<br>மதுரை மாவட்டம் | **5,00,000/–** |

**அலுவலகக் குறிப்பு:–** மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில், வரிசை எண் 1–இன் படி திரு.எம்.பால்பாண்டி, த/பெ.மாயாண்டித்தேவர் கோரியுள்ள உயர்ந்த பட்ச தொகை ரூபாய்.5,96,000/– கடந்த மூன்றாண்டு சராசரியைக் காட்டிலும் ரூ.28,550/– (5,96,000 – 5,67,450= 28,550 ) கூடுதலாகவும், கடந்த ஆண்டு உரிமத் தொகையைக் காட்டிலும் ரூ.650/– (5,96,000–5,95,350=650) கூடுதலாகவும் உள்ளதால் மன்றம் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்:** 04 , நாள் 31.03.2022

**தீர்மானம்** : ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

*******

**பொருள் எண்.5**

இந்நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனமான நேருஜி பேருந்து நிலையத்தில் தெற்கு பக்கம் உள்ள காலியிடத்தில் இருசக்கர வாகனம் நிறுத்துவதற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு, ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு (2022–2025) 15.01.2022 அன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பொது ஏலத்திற்கு முன் வைப்புப் தொகை செலுத்தி ஏலம் கோர ஒருவரும் முன் வரவில்லை.

கீழ் காணும் இனத்திற்கு விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் முன் வைப்புத் தொகை செலுத்தி வரப்பெற்றுள்ளன.

| வரிசை எண். | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி ஆண்டுக்கேள்வி ரூபாய் |
|---|---|---|
| 1 | ப.சங்கீதா,<br>க/பெ.ஆர்.பரமானந்தன்,<br>கிழக்குத் தெரு,<br>முத்துலாபுரம். | 58,500/– |
| 2 | ஆர்.பரமானந்தன்,<br>த/பெ.ராஜமாணிக்கம்,<br>நடுத்தெரு,<br>பரமத்தேவன்பட்டி. | 45,000/– |

**அலுவலகக் குறிப்பு:–** மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில், வரிசை எண் 1–இன் படி திருமதி.ப.சங்கீதா, க/பெ.ஆர்.பரமானந்தன் கோரியுள்ள உயர்ந்த பட்ச தொகை ரூபாய்.58,500/– கடந்த மூன்றாண்டு சராசரியைக் காட்டிலும் ரூ.5,608/– (58,500 – 52,892=5608) கூடுதலாகவும், கடந்த ஆண்டு உரிமத் தொகையைக் காட்டிலும் ரூ.3007/– (58,500–55,493=3007) கூடுதலாகவும் உள்ளதால் மன்றம் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்:** 05 , நாள் 31.03.2022

**தீர்மானம்** : ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

*******

**பொருள் எண்.6**

இந்நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனமான நேருஜி பேருந்து நிலையத்தில் தெற்குப்பக்கம் உள்ள **8** இருக்கைகள் கொண்ட கட்டணக் கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு **(2022–2025) 15.01.2022** அன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பொது ஏலத்திற்கு முன் வைப்புப் தொகை செலுத்தி ஏலம் கோர ஒருவரும் முன் வரவில்லை.

கீழ் காணும் இனத்திற்கு விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் முன் வைப்புத் தொகை செலுத்தி வரப்பெற்றுள்ளன.

| வரிசை எண். | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி ஆண்டுக்கேள்வி ரூபாய் |
|---|---|---|
| 1 | எம்.பால்பாண்டி,<br>த/பெ.மாயாண்டித்தேவர்,<br>பண்ணைப்பட்டி போஸ்ட்,<br>உசிலம்பட்டி தாலுகா,<br>மதுரை மாவட்டம் | **76,500/–** |
| 2 | K.தனசீலன்,<br>த/பெ.M.கருத்தப்பாண்டி,<br>பண்ணைப்பட்டி போஸ்ட்,<br>உசிலம்பட்டி தாலுகா,<br>மதுரை மாவட்டம் | **40,000/–** |

**அலுவலகக் குறிப்பு:–** மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில், வரிசை எண் **1**–இன் படி திரு.எம்.பால்பாண்டி, த/பெ.மாயாண்டித்தேவர் கோரியுள்ள உயர்ந்த பட்ச தொகை ரூபாய்.**76,500/–** கடந்த மூன்றாண்டு சராசரியைக் காட்டிலும் ரூ.**3,992/– (76,500 – 72,508= 3,992 )** கூடுதலாகவும், கடந்த ஆண்டு உரிமத் தொகையைக் காட்டிலும் ரூ.**427/– (76,500**–76073=**427)** கூடுதலாகவும் உள்ளதால் மன்றம் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்:** **06** , நாள் **31.03.2022**

**தீர்மானம் :** ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

*******

**பொருள் எண்.7**

இந்நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனமான நேருஜி பேருந்து நிலையத்தில் வடக்குப்பக்கம் உள்ள 6 இருக்கைகள் கொண்ட கட்டணக் கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு (2022–2025) 15.01.2022 அன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பொது ஏலத்திற்கு முன் வைப்புப் தொகை செலுத்தி ஏலம் கோர ஒருவரும் முன் வரவில்லை.

கீழ் காணும் இனத்திற்கு விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் முன் வைப்புத் தொகை செலுத்தி வரப்பெற்றுள்ளன.

| வரிசை எண். | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி ஆண்டுக்கேள்வி ரூபாய் |
|---|---|---|
| 1 | எம்.பால்பாண்டி,<br>த/பெ.மாயாண்டித்தேவர்,<br>பண்ணைப்பட்டி போஸ்ட்,<br>உசிலம்பட்டி தாலுகா,<br>மதுரை மாவட்டம் | 63,500/– |
| 2 | K.தனசீலன்,<br>த/பெ.M.கருத்தப்பாண்டி,<br>பண்ணைப்பட்டி போஸ்ட்,<br>உசிலம்பட்டி தாலுகா,<br>மதுரை மாவட்டம் | 50,000/– |

**அலுவலகக் குறிப்பு:–** மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில், வரிசை எண் 1–இன் படி திரு.எம்.பால்பாண்டி, த/பெ.மாயாண்டித்தேவர் கோரியுள்ள உயர்ந்த பட்ச தொகை ரூபாய்.63,500/– கடந்த மூன்றாண்டு சராசரியைக் காட்டிலும் ரூ.3,602/– (63,500 – 59898 = 3602 ) கூடுதலாகவும், கடந்த ஆண்டு உரிமத் தொகையைக் காட்டிலும் ரூ.657/– (63,500–62,843=657) கூடுதலாகவும் உள்ளதால் மன்றம் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்:** 07 , நாள் 31.03.2022

**தீர்மானம்** : ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

*******

**பொருள் எண்.8**

இந்நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனமான பழைய நகராட்சி அலுவலக வணிக வளாகத்தில் வடக்குப்பக்கம் உள்ள கட்டணக் கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு (2022–2025)

15.01.2022 அன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பொது ஏலத்திற்கு முன் வைப்புப் தொகை செலுத்தி ஏலம் கோர ஒருவரும் முன் வரவில்லை.

கீழ் காணும் இனத்திற்கு விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் முன் வைப்புத் தொகை செலுத்தி வரப்பெற்றுள்ளன.

| வரிசை எண். | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி ஆண்டுக்கேள்வி ரூபாய் |
|---|---|---|
| 1 | எம்.பால்பாண்டி,<br>த/பெ.மாயாண்டித்தேவர்,<br>பண்ணைப்பட்டி போஸ்ட்,<br>உசிலம்பட்டி தாலுகா,<br>மதுரை மாவட்டம் | 3,23,000/– |
| 2 | K.தனசீலன்,<br>த/பெ.M.கருத்தப்பாண்டி,<br>பண்ணைப்பட்டி போஸ்ட்,<br>உசிலம்பட்டி தாலுகா,<br>மதுரை மாவட்டம் | 3,00,000/– |

**அலுவலகக் குறிப்பு:–** மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில், வரிசை எண் **1–**இன் படி திரு.எம்.பால்பாண்டி, த/பெ.மாயாண்டித்தேவர் கோரியுள்ள உயர்ந்த பட்ச தொகை ரூபாய்.**3,23,000/–** கடந்த மூன்றாண்டு சராசரியைக் காட்டிலும் ரூ.**16,157/– (3,23,000 – 3,06,843 = 16,157)** கூடுதலாகவும், கடந்த ஆண்டு உரிமத் தொகையைக் காட்டிலும் ரூ.**1070/– (3,23,000 – 3,21,930 = 1070)** கூடுதலாகவும் உள்ளதால் மன்றம் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்:** 08 , நாள் 31.03.2022

**தீர்மானம் :** ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

*******

**பொருள் எண்.9**

சின்னமனூர் நகராட்சியில் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்–2022 பணிகள் மேற்கொள்ள 47 எண்ணம் வாக்குச் சாவடி மையங்கள் மற்றும் வாக்கு எண்ணும் மையமான நகராட்சி எல்கைக்குட்பட்ட காயத்திரி மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளியில் கீழ்க்கண்ட விவரப்படியான பணிகள் மேற்கொண்டதற்கு 1920ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் பிரிவு 15–இன் கீழ் மேற்கொண்ட விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்.** | **பணியின் விவரம்** | **தொகை ரூ.பை** |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1. | 47 எண்ணம் வாக்குச் சாவடி மையங்களுக்கு உட்புறங்களில் லைட் பாயிண்ட், பிளக் பாயிண்ட் மற்றும் பேன் பாயிண்ட் அமைக்கும் பணி | 165347.00 |
| 2. | 47 எண்ணம் வாக்குச் சாவடி மையங்களுக்கு போதிய மறைப்புகள் அமைக்கும் பணி | 83185.00 |
| 3. | வாக்கு எண்ணும் மையத்தில் பிளைவுட் அமைத்தல், அஞ்சல் வழி வாக்குச் சீட்டுகள் எண்ணும் பணிக்கு பெட்டிகள் செய்தல் மற்றும் சாமியானா பந்தல் போன்ற கூடுதல் வசதிகள் மேற்கொண்ட பணி | 125204.00 |
| 4. | வாக்கு எண்ணும் மையத்திற்கு வேட்பாளர்கள் செல்லும் வகையில் மரக்கட்டைகளின் மூலம் தடுப்பு வேலி அமைக்கும் பணி | 258657.00 |
| 5. | வாக்கு எண்ணும் அறையில் இரும்பு தடுப்பு மற்றும் வெளிப்புரம் தடுப்புகள் அமைக்கும் பணி | 319898.00 |
| 6. | வாக்கு எண்ணும் மையத்திற்கு சி.சி.டி.வி கேமரா மற்றும் கணினிகள் உபயோகத்திற்கு 1 KVA திறன் கொண்ட 2 எண்ணம் தடையில்லா மின் விநியோகி வாங்கி பொருத்தும் பணி | 71980.00 |
| 7. | வாக்கு எண்ணும் மையங்களில் மைக்செட் வசதி, லைட் வசதி மற்றும் தானியங்கி மின் விநியோகி அமைக்கும் பணி | 66045.00 |

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் பதிவு செய்யலாம்.**

*******

**நகர்மன்ற தீர்மான எண்:** 09 , நாள் 31.03.2022

**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.10**

சின்னமனூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மொத்தம் **1486** CFL தெருவிளக்குகள் பொதுமக்களுக்காக பயன்பாட்டில் உள்ளன. இந்நிலையில் மின்சார சிக்கனத்தினை நடைமுறைபடுத்த, ஏற்கனவே **526** CFL தெருவிளக்குகளை LED விளக்குகளாக மாற்றம் செய்யப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளன. தற்போது எஞ்சிய **960** CFL தெருவிளக்குகளை, கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் **2021–2022**ன்கீழ் LED விளக்குகளாக மாற்றம் செய்ய ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை **ரூ.106.00** இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**
**2.கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் 2021–2022ன்கீழ் திட்டப் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை ரூ.106.00 இலட்சம் மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி வேண்டி சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு சமர்ப்பிக்கலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்:** 10 , நாள் 31.03.2022

**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.11**

சின்னமனூர் நகராட்சியில் அரசாணை (பல்வகை) எண்.71 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(NS) துறை நாள்.13.09.2021ன்படி நமக்கு நாமே திட்டம் நடைமுறைப்படுத்த அனுமதி வழங்கியுள்ளது. மேற்படி திட்டத்தில் பூங்காக்கள் அமைத்தல் பொழுது போக்கு மற்றும் விளையாட்டு வசதிகள் ஏற்படுத்துதல், மரம் நடுதல், பள்ளிக்கூடங்கள் மேம்படுத்துதல், பொது சுகாதாரம் மையம் மற்றும் கற்றல் மையங்கள் சாலைகள், தெருவிளக்குகள் அமைத்தல் போன்ற அடிப்படை வசதிகள் மேற்கொள்ள பணிகளின் மதிப்பீட்டுத் தொகையில் மூன்றில் ஒரு பங்கு பொது மக்களின் பங்குத் தொகை இருக்க வேண்டும் எனவும், நீர் நிலைகளின் கறைகள் மேம்படுத்தும் பணி மற்றும் தூர் வாரும் பணிகளுக்கு குறைந்த பட்சம் பொதுமக்களின் பங்குத் தொகை 50% இருக்க வேண்டும் எனவும், எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி வரப்பெற்ற அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் பதிவு செய்யலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்:** **11** , நாள் **31.03.2022**

**தீர்மானம்** **:** மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.

*******

**பொருள் எண்.12**

சின்னமனூர் நகராட்சியின் நகர்மன்ற தலைவர் அவர்களின் அறைக்கு புதியதாக டேபிள், சேர் வாங்கி வழங்கும் பணிக்கு தொகை ரூ.68440/–ஐ விலைப்புள்ளிதாரர் திரு.எஸ்.சந்திரன், சின்னமனூர் என்பவருக்கு நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியின் கீழ் வழங்க, அவசர அவசியம் கருதி 1920ம் வருடத்தின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15–இன் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** பதிவு செய்யலாம்.

******

**நகர்மன்ற தீர்மான எண்:** **12** , நாள் **31.03.2022**

**தீர்மானம் :** பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.13**

சின்னமனூர் நகராட்சிக்கு 2021–22–ஆம் ஆண்டுக்கு தேனி பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட ஸ்ரீ பூலானந்தீஸ்வரர் கோவில் அருகில் உணவு கூடம் கட்டும் பணி மேற்கொள்ள தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் 16.03.2022ம் தேதிய ந.க.807/2022/தி6 எண்ணிட்ட செயல்முறை உத்திரவின்படி சில நிபந்தனைகளுடன் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | | **மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.1034/2022/இ1)** |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | | 13 , நாள் 31.03.2022 |
| **தீர்மானம்** | : | பதிவு செய்யப்பட்டது. |

*******

**பொருள் எண்.14**

இந்நகராட்சிக்குச் சொந்தமான வார்டு எண்.25, கருங்கட்டாங்குளம் நகாட்சி நடுநிலைப் பள்ளியில் கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களின் நலன் கருதி மராமத்துப் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.6.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | | **1.மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2.மேற்படி செலவினத்தை கல்வி நிதியில் மேற்கொள்ளலாம்.** |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | | 14 , நாள் 31.03.2022 |
| **தீர்மானம்** | : | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.15**

இந்நகராட்சிக்குச் சொந்தமான வார்டு எண்.2, காலனி பள்ளித் தெருவில் அமைந்துள்ள நகராட்சி பள்ளியில் கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களின் நலன் கருதி மராமத்துப் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | | **1.மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2.மேற்படி செலவினத்தை கல்வி நிதியில் மேற்கொள்ளலாம்.** |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | | 15 , நாள் 31.03.2022 |
| **தீர்மானம்** | : | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.16**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் சிறப்பாக

செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் நடைமுறைக்கு வந்து 5 வருடங்களுக்கு மேல் ஆனதாலும், இத்திட்டத்திற்கு என தனியாக பணியாளர்கள் அனுமதிக்கப்படாத காரணத்தினாலும் நகரில் அவ்வப்போது ஏற்படும் அடைப்புகள் மற்றும் பழுதுகள் சரி செய்ய முடியாத சூழ்நிலை உள்ளது.

எனவே பொது சுகாதாரம் மற்றும் பொது மக்களின் நலன் கருதி பாதாள சாக்கடை Manhole அடைப்புகளை உடனுக்குடன் சரி செய்ய ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.9,90,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. **மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்படி செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்:** 16 , நாள் 31.03.2022

**தீர்மானம்** : அனுமதி வழங்கப்பட்டது.

*******

**பொருள் எண்.17**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.9–இல் அமைந்துள்ள ஸ்ரீபூலானந்தீஸ்வரர் கோவிலுக்குச் செல்லும் எள்ளுக்கட்டை சாலையினை ஜே.சி.பி இயந்திரம் கொண்டு சமன்படுத்தும் பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.70,000க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. **மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்படி செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1052/2022/இ1)**

**நகர்மன்ற தீர்மான எண்:** 17 , நாள் 31.03.2022

**தீர்மானம்** : அனுமதி வழங்கப்பட்டது.

*******

**பொருள் எண்.18**

சின்னமனூர் நகராட்சியில் 2019–2020 ஆண்டு தேனி பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தொகை ரூ.9.20 இலட்சம் மதிப்பீட்டில் ஸ்ரீ பூலானந்தீஸ்வரர் கோவில் வளாகத்தில் 16 மீட்டம் உயர்கோபுர மின்விளக்கு (8 Nos x200 watts) அமைக்கும் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரி தினமனி தினசரி நாளிதழில் 28.12.2021ம் அன்று பிரசுரம் செய்தமைக்கு தொகை ரூ.10817/–ஐ M/s.Express Publications (Madurai) Private Limited., Madurai அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

**1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்காணும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.4651/2021/இ1).**

**நகர்மன்ற தீர்மான எண்:** 18 , நாள் 31.03.2022
**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.19**

இந்நகராட்சிக்கு மூலதன மான்ய நிதி (Capital Grant Fund ) 2021–22இன் கீழ் வார்டு எண்.2, இராதாகிருஷ்ணா ரைஸ்மில் தெருவில் அமைந்துள்ள 3.99 MLD கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ஆன்லைன் வழி தொடர்ச்சியான கழிவு நீர் கண்காணிப்பு அமைப்பு (Online Continuous Effluent Monitoring Systems (OCEMS)) நிறுவும் பணியினை ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி 13.01.2022ம் அன்று மக்கள் குரல் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு தொகை ரூ.15225/–ஐ **M/s.மக்கள் குரல்** நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்காணும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.5050/2021/இ1).**
**நகர்மன்ற தீர்மான எண்:** 19, நாள் 31.03.2022
**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.20**

சின்னமனூர் பேரூராட்சி 01.04.1977 முதல் 3–ம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, 1984 முதல் 2ம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு தொடர்ந்து 2–ஆம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. நகராட்சி 25.95 சதுர கிலோ மீட்டர் பரப்பளவினை கொண்டுள்ளது. 2011ம் வருடத்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நகரின் மக்கள் தொகை 42305 ஆகும். நகர் வாழ் பொது மக்களுக்குத் தேவையான குடிநீர் நகரிலிருந்து 4.89 கி.மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள வேம்படி களத்தில் கட்டப்பட்டுள்ள தலைமை நீரேற்று நிலையத்தில், பெரியாற்றின் நடுவில் அமைக்கப்பட்டுள்ள நீர் உறிஞ்சு கிணறுகளிலிருந்து (Infiltration wells) நீர் சேகரம் செய்யும் கிணற்றுக்கு (Collection wells) கொண்டு வரப்பட்டு, 4.89 கி.மீட்டர் தூரத்தில் அமைக்கப்பட்டுள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு குடிநீர் பம்ப் செய்யப்பட்டு, அங்கு நீர் சுத்திகரிக்கப்பட்டு, அங்கிருந்து சீப்பாலக்கோட்டை ரோட்டில் அமைந்துள்ள தரைமட்ட நீர் தேக்கத் தொட்டிகள் மற்றும் மேல்நிலைத் தொட்டிகளுக்கு நீர் பம்ப் செய்யப்பட்டு, அங்கிருந்து நகர்வாழ் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

குடிநீர் விநியோகப் பணிக்கு தலைமை நீரேற்று நிலையத்தில் 40 குதிரை வேக மின்

மோட்டார்கள் 3 எண்ணம், 30 குதிரை வேக மின் மோட்டார் 1 எண்ணம், நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் 20 குதிரை வேக மின் மோட்டார் 2 எண்ணம், 15 குதிரை வேக மின் மோட்டார் 2 எண்ணம் மற்றும் 5 குதிரை வேக மின் மோட்டார் 1 எண்ணம் அமைக்கப்பட்டுள்ளதுடன், தலைமை நீரேற்று நிலையத்தில் நீர் உறிஞ்சு கிணறுகளில் 5 குதிரை வேக திறன் கொண்ட நீர் மூழ்கி மோட்டார்கள் 12 எண்ணம் பொருத்தப்பட்டுள்ளன. மேலும் நகர் வாழ் பொது மக்களின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்ய 35 எண்ணம் பொதுக் குழாய்கள் (Public Fountation) அமைக்கப்பட்டுள்ளன.

நகர் வாழ் பொது மக்களின் குடிநீர் தேவை தவிர்த்து பிற தேவைகளை பூர்த்தி செய்ய நகரில் 76 எண்ணம் மின் பவர் பம்ப் அமைக்கப்பட்டுள்ளதுடன், 121 எண்ணம் ஆழ்துளை கிணறுகள் (Hand Pump) அமைக்கப்பட்டுள்ளன. மேலும் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 4.700 கிலோ மீட்டர் நீளத்திற்கு பிரதானக் குழாய்களும், 34.900 கி.மீட்டர் நீளத்திற்கு பகிர்மானக் குழாய்களும் பதிக்கப்பட்டு குடிநீர் விநியோகப் பணி (Pumping Main and Distribution Main) அதன் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குடிநீர் விநியோகப் பணிக்கு நாளது தேதியில் 2 மின் பணியாளர்கள் (Electrician) 1 குழாய் பொருத்துநர் மற்றும் 1 மதகு திறப்பாளர் (Turn Cock) பணியிடங்கள் மட்டுமே நடைமுறையில் உள்ளன. சீப்பாலக்கோட்டை ரோட்டில் அமைந்துள்ள தண்ணீர் தொட்டிக்கும், குருக்கள் பள்ளித் தெருவில் அமைந்துள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கும், வேம்படி களத்தில் அமைந்துள்ள தலைமை நீரேற்று நிலையத்திற்கும் (Water Tank, FIlter Bed and Water Supply Head works) பகல் மற்றும் இரவு காவல் பணிக்கு போதுமான பணியாளர்கள் இல்லை. மேலும் குடிநீர் விநியோக பொதுக் குழாய்கள், ஆழ்துளை கிணறுகள், பிரதானக் குழாய்கள், பகிர்மானக் குழாய்கள், மினி பவர் பம்ப்கள் மற்றும் மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்து சீரான குடிநீர் விநியோகம் நடைபெற போதுமான பணியாளர்கள் நகராட்சியில் நடைமுறையில் இல்லாததாலும், குடிநீர் விநியோக இடங்களில் பராமரிப்புப் பணிக்கு பணியாளர்கள் தேவைப்படுவதாலும், மின் மோட்டார்கள், ஆழ்துளை கிணறுகளில் ஏற்படும் பழுதுகளை நிவர்த்தி செய்ய பணியாளர்கள் தேவைப்படுவதாலும், போதிய பணியாளர்கள் பணியிடம் நடைமுறையில் இல்லாததால், மேற்படி பணிகளை கவனிக்க ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் நியமித்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி மேற்படி ஒப்பந்தப்பணிக்கு வழங்கப்பட்ட தொகை பிப்ரவரி 2022 உடன் முடிவடைவதால் மார்ச் 2022 முதல் மேற்படி பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளவும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள ரூ.9.90 இலட்சத்திற்கான

மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்:** 20 , நாள் 31.03.2022
**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.21**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான வாகனம் ஈப்பு எண்.TN60Z**6634** நகராட்சியின் பொறியியல் பிரிவில் அலுவலகப் பணியின் நிமித்தம் இயங்கிக் கொண்டிருக்கிறது. மேற்படி வாகனத்தில் கீழ்க்கண்ட விவரப்படி சில மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என தெரிவித்துள்ளதுடன் **2022**க்கான நகர்மன்றத் தேர்தல் நடைபெற உள்ளதால், உடன் பணிகள் மேற்கொள்ள வேண்டும் எனக் கூறியுள்ளார் வாகன ஒட்டுநர் திரு.அ.வீரபத்திரன்

1. புதிய பேட்டரி SF70AH
2. ஆயில் பில்டர் மற்றும் டீசல் பில்டர்
3. ஏர் பில்டர்
4. வீல் அலைன்மெண்ட், வீல் பேலன்ஸ் செய்து டயர்களை மாற்றி போட்டு கிரீஸ் அடித்தல்.

அவசர அவசியம் கருதி நடைபெற உள்ள உள்ளாட்சி **2022–**க்கான நகர்மன்றத் தேர்தல் பணியின் அவசியத்தை முன்னிட்டு, மேற்படி பணிகளை மேற்கொண்ட வகையில் ஆன செலவு ரூ.**9950/–** ஒட்டுநர் திரு.அ.வீரபத்திரன் என்பவர் மேற்கொண்டுள்ளதால் அன்னாரின் **11.02.2022**க்கான அறிக்கையினை ஏற்று செலவினத் தொகையினை தனியருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.**
3. **தேர்தல் நடைபெற உள்ளதால் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணி முடித்து தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்:** 21 , நாள் 31.03.2022
**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.22**

சின்னமனூர் நகராட்சியின் வருவாய் மற்றும் மூலதன நிதி, குடிநீர் வடிகால் நிதி மற்றும் கல்வி நிதிகளின் **2021–2022** ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு / செலவு அறிக்கை (Revised Budget) மற்றும் **2022–2023** ஆம் ஆண்டிற்கான உத்தேச வரவு / செலவு அறிக்கை (Budget) மன்றத்தின்

பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம்.**
**நகர்மன்ற தீர்மான எண்:** 22 , நாள் 31.03.2022
**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.23**

சின்னமனூர் நகராட்சி பொதுசுகாதார பிரிவில் டெங்கு நோய் தடுப்பு பணியில் ஈடுபடும் களப்பணியாளர்கள் (DBC) மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்ணயிக்கும் தினக்கூலி அடிப்படையில் ஊதியம் நிர்ணயம் செய்து ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் பணிமேற்கொண்ட வகையில் மேற்கண்ட பணியின் பணி ஒப்பந்த காலம் (2 மாதங்கள்) 05.04.2022ஆம் தேதியுடன் முடிவடைவதால் பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் மற்றும் கொரோனா தொற்று பரவாமல் தடுக்கவும், மேலும் கோவிட் 19 தடுப்பூசி தொடர்பான கணக்கெடுப்பு பணி மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், மேற்கண்ட பணியினை ஏற்கனவே ஒப்பந்தபணி மேற்கொண்ட பணியினை ஏற்கனவே ஒப்பந்தபணி மேற்கொண்ட திரு.R.பரமானந்தன் ஒப்பந்ததாரர் அவர்களின் மூலமாக மேலும் மூன்று மாதங்கள் பழைய ஒப்பந்த விகிதத்தில் மேற்படி பணியினை நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட ஒப்பந்த பணியினை மூன்று மாதம் நீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1468/2020/எச்1)

**நகர்மன்ற தீர்மான எண்:** 23 , நாள் 31.03.2022
**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.24**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் துப்புரவுப் பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலமாக துப்புரவு பணிகளை மேற்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.21085/பி3/2016 நாள்.31.08.2016–இன்படி 01.08.2016 முதல் 31.07.2019 முடிய அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி அனுமதி காலத்திற்கு பின்பு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வது சம்மந்தமாக கடந்த 03.06.2019ம் அன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு, அதனடிப்படையில் மேற்கண்ட அலுவலகத்தில் இருந்து தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவுப்பணிகளை மேற்கொள்ள

அனுமதி கோரி ந.க.2790/2019/அ3 நாள்.03.07.2019ஆம் தேதிய கடிதப்படி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் மூலம் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுமதி வேண்டி கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட உத்திரவு கிடைக்கும் வரை சின்னமனூர் நகராட்சி பொது மக்களின் சுகாதார நலன் கருதி இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.0576/2015/எச்1–இன்படி 01.08.2019 முதல் 31.12.2021 வரை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி உத்திரவை எதிர்நோக்கி ஒப்பந்தக்காலம் நீட்டிப்பு செய்து உத்திரவிடப்பட்டது.

இந்நகராட்சியில் கொரோனா தொடர்பாக பணிகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருவதாலும், மேலும் தினந்தோறும் உருவாகும் திடக்கழிவுகளை சேகரித்தல், சேகரிக்கப்பட்ட திடக்கழிவுகளை தரம்பிரித்தல், மக்கும் மற்றும் மக்காத திடக்கழிவுகளை பாதுகாப்பாக கொண்டு சேர்த்தல் போன்ற காரணங்களுக்காகவும், பொது சுகாதாரம் மற்றும் பொது மக்கள் நலன், சுற்றுச்சுழல் பாதுகாப்பு, தினந்தோறும் பொது மக்களிடமிருந்து வருகின்ற குறைகளை களையவும் அவசரம் மற்றும் அவசியம் கருதி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்தரவை எதிர்நோக்கி மூன்று மாத காலத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.435 நாள்.31.12.2021–இன்படி ஜனவரி 2022 முதல் மார்ச் 2022 வரை ந.க.எண்.0576/2015/எச்1 நாள்.31.12.2021–இன் மூலம் அதே ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தின்படி பணிபுரியும் நிறுவனத்தின் பணியாளர்கள் மூலம் துாய்மை பணி செய்ய நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கப்பட்டது.

இந்நிலையில் 31.03.2022 உடன் ஒப்பந்தக்காலம் நீட்டிப்பு முடிவடைவதாலும், இந்நகராட்சி பகுதியில் கொரோனா (Covid–19) தொற்று பரவல் தாக்கும் அபாயம் இருப்பதாலும், மேற்கண்ட திடக்கழிவு பணியினை செயல்படுத்த வேண்டிய சூழல் உள்ளதாலும் அவசர அவசியம் மற்றும் கொரோனா தொற்று தடுப்பு பணியில் ஈடுபடவேண்டிய அவசர சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இச்சூழ்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்தரவு வரப்பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கும் வரையிலும் திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்ததாரர் மூலமாக தொடந்து அதே விலை விகிதத்தில் பணி நீட்டிப்பு வழங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:-** | பொது சுகாதாரம் மற்றும் கொரோனா தொற்று தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே பணி உத்திரவு வழங்கிய திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தகாரர் மூலமாக தொடர்ந்து நீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க.எண்.0576/2020/எச்1) |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 24 , நாள் 31.03.2022 |
| **தீர்மானம்** | அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

:

*******

**பொருள் எண்.25**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளை வீடு வீடாக சென்று பிரித்து வாங்குதல், தெரு கூட்டுதல், வடிகால் சுத்தம் செய்தல், சுத்தம் செய்த சாக்கடை மண்ணை அகற்றுதல், சாலையோர மண்களை அகற்றுதல், மழைநீர் வடிகால் மண் அகற்றுதல் சேகரிக்கப்பட்ட குப்பை, சாக்கடை மண் கழிவுப்பொருட்களை சேகரம் செய்யும் தொட்டிக்கு (Collection) கொண்டு சேர்த்தல் ஆகிய துப்புரவு பணிகளுக்கு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 22.11.2018 ந.க.28369/ஜே3/2018 எண்ணிட்ட கடிதத்தில் 49 துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்ணயித்த தினக்கூலி பட்டியலின்படி வழங்க உத்திரவு பிறப்பித்ததை தொடர்ந்து மேற்கண்ட 49 தனியார் துப்புரவுப் பணியாளர்களை கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரியதில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த M/s Reylon Facility Services Pvt Ltd., Chennai என்ற நிறுவனத்திற்கு ஒப்பந்த நிபந்தனைகளுக்குட்பட்டு பணி உத்திரவு வழங்கப்பட்டு ஓராண்டு நிறைவு பெறும் நிலையில் மேற்கண்ட நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவில் மேற்கண்ட பணியினை மூன்றாண்டு காலம் மேற்படி நிறுவனத்தின் செயல்பாடுகள் திருப்திகரமாக இருப்பின் நகர்மன்றத்தின் அனுமதி பெற்று தொடரலாம் என அறிவுறுத்தியதை தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்தரவு வரப்பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கும் வரையிலும் M/s Reylon Facility Services Pvt Ltd., Chennai என்ற நிறுவனத்திற்கு தொடர்ந்து அதே விலை விகிதத்தில் பணி நீட்டிப்பு வழங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம்.**
**நகர்மன்ற தீர்மான எண்:** 25 , நாள் 31.03.2022
**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.26**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிவறைகள் (1+9) மொத்தம் 10 இயங்கி வருகின்றன. மேற்படி பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ள கழிவறைகளை நல்லமுறையில் பராமரிக்கும் பொருட்டு, அரசாணை (நிலை).77, பள்ளிக்கல்வி

(ப.க4C1)த்துறை நாள்.13.04.2015 மற்றும் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் 26.10.2017ம் நாளிட்ட ந.க.32050/2016/ஜே2 எண் கடிதத்தில் ஆணைகள் மற்றும் அறிவுரைகள் பிறப்பிக்கப்பட்டன. அதனடிப்படையில் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள 1 அரசு பள்ளி மற்றும் 9 எண்ணம் (தொடக்கப்பள்ளி–5, நடுநிலைப்பள்ளி– 3 மற்றும் உயர்நிலைப்பள்ளி–1) நகராட்சிப்பள்ளி ஆக மொத்தம் 10 பள்ளிகளில் உள்ள கழிவறைகளை சுத்தமாக பராமரிக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி திரு.R.பரமானந்தன் என்ற ஒப்பந்ததாரருக்கு 01.03.2018 முதல் பணி செய்ய உத்திரவிடப்பட்டு தொடர்ந்து பணி செய்து வருகிறார். தற்பொழுதுதான் கொரோனா நோய் தொற்று குறைந்துள்ள காரணத்தால் மறு ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்தம் பெற தாமதமாகும் என்பதால் ஏற்கனவே இப்பணியை செய்து வரும் திரு.R.பரமானந்தன் என்ற ஒப்பந்ததாரருக்கு, ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்தில் தொடர்ந்து 01.04.2022 முதல் 31.03.2023 வரை பணி செய்ய உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** 1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி செலவினத் தொகையை 2022 –2023 ஆம் ஆண்டிற்கான கல்விநிதியிலிருந்து செலவு செய்யலாம்.

3. ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்க போதிய கால அவகாசம் இல்லை என்பதாலும் ஒப்பந்தபுள்ளி கோரினால் சென்ற ஆண்டு தொகையை விட கூடுதல் தொகைக்கு வழங்க வேண்டிய நிலைதான் ஏற்படும் என்பதை உத்தேசித்தும் ஒப்பந்ததாரர் திரு.R.பரமானந்தன் என்பவருக்கு பணிநீட்டிப்பு வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்:** 26 , நாள் 31.03.2022

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

*******

## பொருள் எண்.27

சின்னமனூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது சுகாதாரம் தினசரி உருவாகும் திடக்கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டு, உரம் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகின்றது. உரம் தயாரிக்க பயன்படும் மக்கும் குப்பைகள் தவிர ஏனைய திடக்கழிவுகள் அனைத்தும் நகராட்சி சொந்தமான அய்யனார்புரம் கலவை உரக்கிடங்கில் கொட்டி வைக்கப்பட்டு வருகின்றது. அவ்வாறு கொட்டி வைக்கப்பட்ட குப்பைகள் நிறைந்து விட்டபடியால், வரும் நாட்களில் குப்பைகள் கொட்ட இல்லாத சூழ்நிலை உள்ளது. எனவே, மேற்படி குப்பைகளை ஒதுக்கி ஒப்புறப்படுத்திட 500 மணி நேரம் ஆகலாம். அதற்கான தோராய செலவினம் ரூ.5,00,000/– ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்:** 27 , நாள் 31.03.2022

**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.28**
சின்னமனூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது சுகாதாரம் டெங்கு, மலேரியா, பைலேரியா போன்ற நோய் தடுப்பு நடவடிக்கைக்கும், மருந்து தெளிப்பதற்கும், நுண்ணுயிர் உரக்கிடங்கில் கிருமிநாசினிகள் தெளிப்பதற்கு 5 எண்ணிக்கை Fibre Hand Sprayer தேவைப்படுவதால் வாங்குவதற்கு அதற்கான தோராய செலவினம் ரூ.20,000/– ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம்.**
**நகர்மன்ற தீர்மான எண்:** 28 , நாள் 31.03.2022
**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.29**
சின்னமனூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது சுகாதாரம் மக்கும் குப்பை அரைக்கும் MCC நுண்ணுயிர் உரசெயலாக்க மையத்தில் உள்ள 19 தொட்டிக்கு அளவு எழுதியதற்கும், இரும்பு பிளாக் பலகையில் பெயிண்ட் மற்றும் எழுதியதற்கும் டிஜிட்டல் பேனர் அடித்தற்கும் அதற்கான தோராய செலவினம் ரூ.40,000/– ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம்.**
**நகர்மன்ற தீர்மான எண்:** 29 , நாள் 31.03.2022
**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.30**
சின்னமனூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது சுகாதாரம் பொதுமக்கள் கூடக்கூடிய இடங்கள், நீர்நிலை பகுதிகள், வடிகால் ஓரங்கள், வழிபாட்டு தளங்கள், சாலை ஓரங்கள் மற்றும் முக்கிய இடங்களில் குப்பைகளுடன் கலந்து பழைய மண் மேடுகள் இருப்பதாலும், அசுத்தமாகவும், பொதுமக்களுக்கும், பொது சுகாதாரத்திற்கும் இடையூறாகவும் உள்ளது. எனவே மேற்கண்ட மண்மேடுகளுடன் கூடிய குப்பை கூலங்களை துஊக்ஷ இயந்திரம் ஒன்றும், இரண்டு டிராக்டர்களும் பயன்படுத்தி அப்புறப்படுத்திடலாம். அதற்கான தோராய செலவினம் ரூ.5,00,000/– ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம்.**
**நகர்மன்ற தீர்மான எண்:** 30 , நாள் 31.03.2022
**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.31**
சின்னமனூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது சுகாதாரப் பிரிவில் தற்போது TATA ACE

வாகனம் 4 எண்ணிக்கையும், ஒரு லாரியும், ஒரு டிராக்டரும் திடக்கழிவு மேலாண்மை பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றது. மேற்படி வாகனங்களில் ஒலி பெருக்கி அமைத்து திடக்கழிவு மேலாண்மை, நோய் கட்டுப்பாடு நடவடிக்கைகள், அரசின் திட்டங்கள் ஆகியவை குறித்து தேவைப்படும் தருணங்களில் விளம்பரம் செய்யப்பட்டு வருகின்றது. அதன்படி தற்போது 3 எண்ணிக்கையில் மட்டுமே ஒலி பெருக்கி புதிதாக வாங்கி, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த பயன்படுத்திடலாம். மேலும் ஐந்து கை ஒலி பெருக்கியும் வாங்கி வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. அதற்கான தோராய செலவினம் ரூ.28,000/– ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம்.**
**நகர்மன்ற தீர்மான எண்:** **31** , நாள் **31.03.2022**
**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.32**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள விஸ்வன்குளம் நீர்நிலைப்பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகள் குறித்து மேற்க்கொள்ளப்பட்ட வழக்கு எண்கள் WP(MD) No.14044 to 14047/2019–ன் படி வரப்பெற்ற தீர்ப்பின் அடிப்படையில் ஆக்கிரமிப்புகளை அகற்றுவது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நீர்நிலைப்பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகள் குறித்து மேற்க்கொள்ளப்பட்ட கூட்டத்தில் மேற்காணும் பொருள் கலந்துரையிடப்பட்டதில் வருவாய்துறை, மாவட்ட காவல்துறை மற்றும் மின்சாரப் பகிர்மானக் கழகம் உதவி மின்செயற்பொறியாளர் , சின்னமனூர் நகராட்சி நிர்வாக அலுவலர்கள் இணைந்து ஆக்கிரமிப்புகளை அகற்ற அறிவுறுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஆக்கிரமிப்புகளை அகற்றப்பட்ட பின்பு, சாலையின் பக்கவாட்டில் உள்ள மண் குவியல்கள், கற்கள் அப்புறப்படுத்துதல் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்க ஏதுவாக வீடியோ காட்சிகள் பதிவு செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ள 22.12.2021ஆம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பெயர் மற்றும் முகவரி | பணியின் விவரம் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | ஆர்.பரமானந்தன்,<br>ஒப்பந்தக்காரார்,<br>பரமத்தேவன்பட்டி | 1.ஜே.சி.பி வாடகை ஒரு மணி நேரத்திற்கு | ரூ.1170/– |
| | | 2. டிராக்டர் வாடகை ஒரு மணி நேரத்திற்கு | ரூ.650/– |
| | | 3.வீடியோ பதிவு செய்வதற்கு ஒரு நாளைக்கு | ரூ.11000/– |
| | | 4.ஆட்டோ மூலம் விழிப்புணர்வு ஒரு நாளைக்கு | ரூ.1650/– |
| 2. | கே.வனராஜ், ஒப்பந்ததாரர், | 1.ஜே.சி.பி வாடகை ஒரு மணி நேரத்திற்கு | ரூ.1100/– |

| | | | |
|---|---|---|---|
| | வ.எண்.14, நடுத்தெரு, சின்னமனூர் | 2. டிராக்டர் வாடகை ஒரு மணி நேரத்திற்கு | ரூ.600/– |
| | | 3.வீடியோ பதிவு செய்வதற்கு ஒரு நாளைக்கு | ரூ.11000/– |
| | | 4.ஆட்டோ மூலம் விழிப்புணர்வு ஒரு நாளைக்கு | ரூ.1600/– |

**அலுவலகக் குறிப்பு:–** **மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண்.2–இல் காணும் திரு.கே.வனராஜ், சின்னமனூர் என்பவரின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.87/2016/எப்1)**

**நகர்மன்ற தீர்மான எண்:** 32 , நாள் 31.03.2022

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.33**

சின்னமனூர் நகராட்சியில் நகர்மன்ற உறுப்பினர்களுக்கான உள்ளாட்சித்தேர்தல் 2022 முடிவுற்று புதிய உறுப்பினர்கள் பதவியேற்றதுடன் நகர்மன்றத் தலைவர் மற்றும் நகர்மன்ற துணைத்தலைவர் ஆகியோர் பதவியேற்றுக்கொண்டுள்ளார். நகர்மன்றத்தலைவர் (வீடு) மற்றும் நகர்மன்ற துணைத்தலைவர் (வீடு) ஆகியோருக்கு தினமலர், தினத்தந்தி, தினமணி மற்றும் தினகரன் தினசரி நாளிதழ்கள் விநியோகம் செய்வதற்கும், இதற்கான உத்தேச செலவினம் ரு.25,000/–க்கு (ரூபாய் இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) என்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்:** 33, நாள் 31.03.2022

**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.34**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2–இல் பொன்னகர் செல்லும் ரோட்டின் மேற்குப் பக்கம் அமைந்துள்ள கால்நடை மருத்துவமனைக்கு வழங்கப்பட்டுள்ள குழாய் இணைப்பு எண்.672–க்கு 2007–08 ஆண்டு முதல் 2021–2022ம் ஆண்டு முடிய குடிநீர் கட்டண நிலுவைத் தொகை ரூ.23160/– மற்றும் அபராதக் கட்டணம் ரூ.3000/– ஆக மொத்தம் ரூ.26160/– செலுத்தப்படாமல் நிலுவையாக உள்ளது.

மேற்படி இணைப்பிற்கான நிலுவை குடிநீர் கட்டணத்தினை செலுத்தக் கோரி அறிவிப்புக்கள் ஒவ்வொரு ஆண்டிற்கும் அனுப்பப்பட்டதில் 15 ஆண்டுகளுக்கும் மேலாக மேற்படி குழாயில் குடிநீர் வரவில்லை என்றும், அதனால் நிலுவைத் தொகையினை செலுத்த இயலாத நிலை உள்ளதாக, உத்தமபாளையம், கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் அவர்களின் 06.01.2022ம் நாளிட்ட ந.க.1221/ஈ/2021–இல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி கால்நடை மருத்துவமனையினை தல ஆய்வு செய்ததில், மேற்படி

கட்டிடத்திற்கு வழங்கப்பட்டுள்ள குடிநீர் இணைப்பு பயன்பாட்டில் இல்லை எனத் தெரிய வருவதாக நகராட்சிப் பொறியாளர் அவர்கள் தனது 20.01.2022ம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார்கள். எனவே 2007–2008 முதல் 2021–2022 முடிய உள்ள காலத்திற்கு கால்நடை மருத்துவமனை இணைப்பு எண்.672 (புதிய இணைப்பு எண்.121/002/00025)க்கான குழாய் இணைப்புக் கட்டண நிலுவை ரூ.26160/–ஐ (கட்டணம் ரூ.23160+தாமத கட்டணம் ரூ.3000/– ஆக மொத்தம் ரூ.26160/–) கேட்பிலிருந்து தள்ளுபடி செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **15 ஆண்டுகளுக்கு மேல் மேற்படி குடிநீரா இணைப்பு பயன்பாட்டில் இல்லை என நகராட்சிப் பொறியாளர் அவர்கள் தெரிவித்துள்ளதால், மேற்படி குடிநீர்க் கட்டண நிலுவைத் தொகை ரூ.26160/– கேட்பிலிருந்து தள்ளுபடி செய்யலாம்.** |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 34 , நாள் 31.03.2022 |
| **தீர்மானம் :** | அலுவலகக்குறிப்பு அங்கீரிக்கப்பட்டது. |

*******

## பொருள் எண்.35

இந்நகராட்சிக்குச் சொந்தமான வார்டு எண்.27, அய்யனார்புரம் நகராட்சி பள்ளி மற்றும் அங்கன்வாடி மையத்தில் கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களின் நலன் கருதி மராமத்துப் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவினத்தை கல்வி நிதியில் மேற்கொள்ளலாம்.** |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 35 , நாள் 31.03.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

## பொருள் எண்.36

இந்நகராட்சிக்குச் சொந்தமான ஈப்பு வாகனம் எண்.TN60S2751, நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் –2022 மற்றும் கொரோனா தடுப்பு பணிகளுக்கு அதிக அளவில் பயன்படுத்தியதால் வாகனம் மிகவும் பழுதடைந்துள்ளதாகவும் தற்போது நகர்மன்றத் தலைவர் அவர்களுக்கு வாகனம் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால் மேற்படி வாகனத்தினை பழுது நீக்கும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.150000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **மன்றம் அனுமதிக்கலாம்** |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 36 , நாள் 31.03.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.37**

சின்னமனுார் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் புதியதாக, திருத்திய மற்றும் மராமத்து கட்டிடம் கட்டுபவர்களுக்கு காலதாமதமின்றி விரைந்து கட்டிட–திட்ட அனுமதி வழங்கும் உள்ளூர் திட்டக் குழுமத்தின் அதிகாரத்தினை நகராட்சி ஆணையாளருக்கு வழங்கலாம் என அரசு ஆணை எண்66/2000 நாள் 17.06.2000–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அலுவலக கடித ந.க.எண்.28880/2018/டிபி2 நாள்21.09.2021.

மேற்கண்ட அரசாணையின் படியும், தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டப்பிரிவு 91–எ(1)ன் கீழ் நகராட்சி ஆணையாளருக்கு உள்ளூர் திட்டக் குழுமத்தின்( Local Planning Authority) அதிகாரத்தினை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **மன்றம் அனுமதிக்கலாம்** |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 37 , நாள் 31.03.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.38**

இந்நகராட்சிக்கு மூலதன மான்ய நிதி (Capital Grant Fund ) 2021–22இன் கீழ் வார்டு எண்.2, இராதாகிருஷ்ணா ரைஸ்மில் தெருவில் அமைந்துள்ள 3.99 MLD கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ஆன்லைன் வழி தொடர்ச்சியான கழிவு நீர் கண்காணிப்பு அமைப்பு (Online Continuous Effluent Monitoring Systems (OCEMS)) நிறுவும் பணியினை ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 21.01.2022ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. M/s RL Technologies Pvt Ltd., Chennai – 4.86 சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம்
2. M/s BAC Infra Tech Pvt Ltd., Hydrabad -8.81 சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம்

**அலுவலகக் குறிப்பு:–** 1.மூலதன மான்ய நிதி 2021–22–இன் கீழ், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ஆன்லைன் வழி தொடர்ச்சியான கழிவு நீர் கண்காணிப்பு அமைப்பு நிறுவும் பணிக்கு மேற்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அதன்படி வரிசை எண்.1–இல் காணும் M/s RL Technologies Pvt Ltd., Chennai என்பவரது விலைப்புள்ளி 4.86% சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ளதால், மேற்படி ஒப்பந்ததாரரிடம் பேரப் பேச்சு கடிதம் (Negotiation Letter) வழங்கக்கோரி 25.03.2022–இல் கடிதம் அனுப்பியமைக்கு, மூலதனப் பொருட்கள் விலையுயர்வு மற்றும் தொழிலாளர் கூலி உயர்வு காரணமாக ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலையினை குறைக்க இயலாது என தெரிவித்துள்ளார். மேலும் 2000–ஆம் வருடத்திய உள்ளாட்சி

அமைப்பிற்கான பொறியியல் நடைமுறை நூல் இயல்–**II (Chapter-II) விதி எண்**.2.7.2–இன்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
**2.**மதிப்பீட்டினைவிட கூடுதலாக வரும் செலவினத்தினை இந்நகராட்சி வருவாய் மற்றும் பொது நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.5050/2021/இ1).

**நகர்மன்ற தீர்மான எண்:** 38 , நாள் 31.03.2022

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

*******

## பொருள் எண்.39

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் பருவமழைக் காலங்களில் பாதாள சாக்கடை பைப்களில் வெள்ள நீர் புகுந்து தாழ்வான பகுதியான மெயின் ரோட்டிற்கு மேற்குப் பக்கம் உள்ள தெருக்களில் கழிவு நீர் சென்று பாதாள சாக்கடை இணைப்பு உள்ள வீடுகளில் அடைப்பு ஏற்பட்டு சுகாதாரக்கேடு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. எனவே பொது சுகாதாரம் மற்றும் பொது மக்களின் நலன் கருதி மேற்படி தெருக்களில் புதியதாக பைப்லைன் பதிக்கும் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.5,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு:–**

1. **மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்படி செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்:** 39 , நாள் 31.03.2022

**தீர்மானம்** : அனுமதி வழங்கப்பட்டது.

*******

## பொருள் எண்.40

இந்நகராட்சி அலுவலகத்தில் ஆணையாளர், நகர்மன்றத் தலைவர், நகராட்சி பொறியாளர், கணினி உதவி திட்ட அமைப்பாளர், துப்புரவு அலுவலர், துப்புரவு ஆய்வாளர் மற்றும் பொதுப் பிரிவு ஆகிய இடங்களில் உள்ள குளிரூட்டும் சாதனங்களில் (Air Conditioner) அவ்வவ்போது ஏற்படும் பழுதினை நீக்கம் செய்யும் பணிக்கு (2022–2023–ஆம் நிதியாண்டிற்கு) உத்தேச மதிப்பீடு தொகை ரூ.1,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. **மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்படி செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்:** 40 , நாள் 31.03.2022

**தீர்மானம்** : அனுமதி வழங்கப்பட்டது.

*******

## பொருள் எண்.41

இந்நகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் வார்டு எண்.3, சாமிகுளம் மற்றும் வார்டு எண்.5, வாரச்சந்தை தெற்குப் பகுதியில் உள்ள நுண்ணுயிர் உரமையங்களுக்கு சில மராமத்துப் பணிகள் ரூ.1.00 இலட்ச மதிப்பீட்டில் மேற்கொள்ள 26.03.2022ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.கே.வனராஜ், ஒப்பந்தக்காரர் – 0.25 சதவீதம் மதிப்பீட்டைவிட குறைவு
2. திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் –0.50 சதவீதம் மதிப்பீட்டைவிட அதிகம்

அலுவலகக் குறிப்பு:– **மேற்காணும் விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–இல் காணும் திரு.கே.வனராஜ், சின்னமனூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்:** 41 , நாள் 31.03.2022

**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.42**

இந்நகராட்சியின் குடிநீர் விநியோகப்பணிக்கு பயன்படுத்தப்படும் திரவ வாயு, குளோரின், சிலிண்டர்கள் (1 வருடத்திற்கு) வாஙகும் பணிக்கு ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:–

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மேற்காணும் செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்:** 42 , நாள் 31.03.2022

**தீர்மானம் :** அனுமதி வழங்கப்பட்டது.

*******